"கைங்கரியச் சிறப்பு", "பைங்கிளி இரங்கல்", "எல்லாம் ஒன்றுதான்", இவைகளைப் படியுங்கள்.

தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி௵ ஆவணி௴ 25௳ (10-9-'22.) | ப. 20.

விஷய அடக்கம்.

1. வர்த்தமானம் ....
2. ஓர் பிரபுவின் தன்மை ....
3. கைங்கரியச் சிறப்பு ....
4. பைங்கிளி இரங்கல் ....
—(ஸ்ரீமான் "ராமசந்திரர்" எழுதியது)
5. எல்லாம் ஒன்றுதான் ....
—(ஓர் "வக்கீலைக்காரனல்" எழுதப்பட்டது)
6. புயற்காற்று ....
(ஸ்ரீமான் V. நாராயணய்யர், M.A.M.L., எழுதியது)—மகாகவி டாக்டர். ரவீந்திரநாத் டாகூரின் "ரெக்" என்னும் கதையின் மொழிபெயர்ப்பு.

வர்த்தமானம்

சென்ற 18 வருஷமாய், கல்கத்தா ஹைகோர்ட்டில் ஜட்ஜாயிருந்துவந்த ஸர். ஜான் வுட்ராப் என்பவர், ஒருவாரத்திற்குமுன், பென்ஷன் பெற்றுத் தனது உத்தியோகத்திலிருந்தும் விலகிவிட்டார். கல்கத்தா ஹைகோர்ட் வக்கீல்களும், ஜட்ஜ்களும், அப்பொழுதுஅவரை மிகவும் புகழ்ந்துகூறினர்கள்.

ஸர். ஜான் வுட்ராபைப்போல், நமது சாஸ்திரங்களில் தேர்ச்சியடைந்தவர்கள் இந்தியர்களுக்குள்ளும் கிடைப்பதரிதாயிருக்கும். சாக்தர்களைப் பற்றியும், சாக்த மதத்தைப்பற்றியும் அவர் எழுதியுள்ள புஸ்தகங்கள் மிகவும் கொண்டாடப்படுகின்றன.

இந்தியாவின் நன்மைக்காகவே அவர் இன்னும் நெடுநாள் ஜீவித்திருக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்.

இந்தியர்களுக்குரிய ஸ்வய ஆக்ஷி ஸ்வாதீனத்தை அடைவதெப்படி யென்று, பம்பாய் நகரத்தில் டாக்டர். அன்னி பெஸண்ட் ஓர் உபன்னியாசம் செய்திருக்கிறார். அப்போது, இவ்விந்தியாவின்கண், கிராம வாழ்க்கையை நாம் சீராக்குவது முற்றும் அவசியமென்றும், மேலும் அப்படிச் செய்வதால்தான் நாம் நமது ஸ்வராஜ்ய ஸ்வதந்திரத்தைப் பெறக்கூடுமென்றும், அப்பிரசங்கத்தில் வற்புறுத்தினர்.

பட்டணவாசத்திற்காகவே கிராமங்களை எல்லோரும் எங்கும் பாழாய் அடித்து வருங்காலத்தில், டாக்டர். பெஸண்ட் உபதேசத்தை யார் கேட்பார்கள்? ஆயினும், இப்போது கிராமவாழ்க்கையின் பெருமையை நாம் நாடெங்கும் பரவச்செய்யவேண்டும். மகாகவி டாக்டர் ரவீந்திரநாத் டாகூரும் ஓர் கிரந்தத்தில் இதைப்பற்றி, விஸ்தாரமாய், மிகுந்த ஆக்கிரகத்தோடு, எழுதியிருக்கிறார்.

இக்காலத்தில், ஆசாரியர்களும் கிராமவாஸத்தைப் புகழ்ந்து பேசிவந்தால், அது மிக்கப் பிரயோஜன முள்ளதாயிருக்கும்.

பேரிலி பட்டணத்தில், U.P. கவர்மெண்டில் மந்திரியாயிருந்துவரும் Hon. C.Y. சிந்தாமணி என்பவர், கவர்மெண்ட் ஹை ஸ்கூலில் பேசும்பொழுது, இந்தியவாலிபர்கள் ஸர்க்கார் உத்தியோகங்களுக்காக ஆசைப்படுவது தவறென்றும், ஆயின் அவர்கள் விவசாயம், வியாபாரம்முதலான இதர தொழில்களை நாடிச் செல்வதுதான் நன்மையைத் தருமென்றும் சொல்லியிருப்பதாய்த் தெரிவிக்கப்படுகின்றது.

தென்னிந்தியாவில், அதிலும் தமிழர்களில், எத்தனை பெயர்கள் இவ்வார்த்தைகளை மதிப்பார்கள்?

வெகு சமீபத்தில் ஸிம்லாவில் ஓர் சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அதற்கு "இண்டோ-பிரிடிஷ் எம்பையர் லீக்" என்று நாமகரணம் செய்திருக்கிறார்கள். அதின் நோக்கங்களைப்பற்றிப் பின்வரும் விளம்பரத்தை வெளியிட்டிருக்கின்றனர்:—

"இம்மகாகோரமான யுத்தம் முடிந்தபின்பும், இவ்வுலகமெங்கும் ராஜ்ய தந்திரிகள், அதனால் விளைந்த கெடுதல்களைத் தீர்க்க முடியாமல், கலக்கமுற்றிருக்கும்போது, இத்தேசத்தில் இவ்வாறு நமக்குள் சச்சரவுகளிருப்பதால் உபயோகமென்ன? 1919ம் வருஷத்திய இந்தியா சீர்திருத்த சட்டத்தை நாம் ஏற்றுக்கொண்டு, நம்மால் கூடியமட்டும் தேசத்திற்காகப் பாடுபட்டு உழைப்பதுதான் க்ஷேமகரமா யிருக்கும். ஆங்கிலேயர்களுடைய ஒத்தாசையின்றியே, நாம் வெகு சுலபமாய் செழித்தோங்குவது சாத்தியமில்லை யென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள்."

இச்சங்கத்தைப் பற்றிய விபரங்களெல்லாம், அதின் "ஜெனரல்ஸெக்ரெடரி" என்பவருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

இதை ஸ்தாபித்திருப்பவர்கள் உயர்ந்த எண்ணங்களுடன்தான் இவ்வாரம்பம் செய்திருக்கவேண்டும். இதில் ஒன்றும் நமக்காக்ஷேபணைகள் இல்லை. ஆகிலும், இந்தியா சீர்திருத்த சட்டமும் எப்படிப் பட்டதென்பது நன்றாய்த் தெரிந்தபிற்பாடு, நமக்குள் இப்பிரமையும் ஏன்?

" பெங்காலி " பத்திரிகையில், தனக்கு சொந்தமாயிருந்ததோர் பாகத்தை, ஸர். சுரேந்திர நாத் பானர்ஜி, காஷிம்பஸார் மகாராஜாவுக்கு, விற்றுவிட்டதாய்ச் சொல்லப்படுகின்றது. இப்பத்திரிகைக்காக ஸர். சுரேந்திரநாத் ஏறக்குறைய ஐம்பது வருஷகாலம் பாடுபட்டிருக்கிறார்.

ஆமதாபாத், 2—9—1922

பம்பாய் கவர்மெண்டார் உத்தரவின்பேரில், ஸ்ரீமான். கணேச ஸாவர்கர் ஸபர்மதி ஜெயிலிலிருந்து நேற்றைய தினம் விடப்பட்டார். அங்கிருந்து அவருடைய சகோதரர் அவரை பம்பாய் நகரத்திற்கு அழைத்துச் சென்றார். வெகு பலஹீனமாகவும், இரத்தமில்லாதவராயும் காணப்பட்டார்.

இவர் அனுபவித்திருக்கும் துயரங்கள் எவ்வளவு!

இந்தியா லெஜிஸ்லேடிவ் அஸெம்ப்ளியில் மெம்பராயிருக்கும் Mr. யாமீன்கான் என்பவர், இந்தியர்களும் சைனியத்தில் மேன்மேலும் அதிகமாய் சேர்த்துக்கொள்ளப்படவேண்டுமென்றும், இப்பொழுது இந்தியாவிலுள்ள ஐரோப்பிய சேனைகள் சரிபாதியாகக் குறைக்கபட வேண்டுமென்றும் கேட்க உத்தேசித்திருக்கின்றார். ஆங்கிலேயர்களுக்கு பதிலாய் இந்தியர்கள் வருவதால், சைனியச்செலவானது மிகவும் மீட்கப்பட்டு, அதனால் படிப்புக்காகவும், தொழில்களின் அபிவிருத்திக்காகவும் பணம் கிடைக்குமென்றே எண்ணுகிறார்.

இக்காரியம் மிக்க சிலாகிக்கத்தக்கதென்றாலும் இதை இந்தியா கவர்மெண்டாரல்லவோ ஏற்றுக்கொள்ளவேண்டும்!

எஜிப்ட் தேசத்தவர்களின் ஸ்வய ஆக்ஷி ஸ்வதந்திரத்திற்காக வெகு தீரமாய் உழைத்த ஸாக்லுல் பாஷாவை, அவருடைய தேச சௌக்கியத்திற்காகவே, ஸேஷல் த்வீபத்திலிருந்து ஜிப்ரால்டருக்கு மாற்றிவிட்டதாய்த் தெரியவருகின்றது.

" ஹிதவாத " மென்னும் பத்திரிகைக்கு ஒருவர் பின்வருவாறு எழுதுகிறார்:

குடியேற்ற நாடுகளில்

மாகாணங்கள்	வருஷ வருமானம் ரூபாய்	கவர்னரது மாதச் சம்பளம்—ரூபாய்
ந்யூ ஸௌத் வேல்ஸ்	28 கோடி	4200
விக்டோரியா	15 கோடி	4200
ஸௌத் ஆஸ்ட்ரேலியா	7 கோடி	3325
க்வீன்ஸ் லண்ட்	11 கோடி	2500
வெஸ்டர்ன் ஆஸ்ட்ரேலியா	67 கோடி	3325
ந்யூஸீலண்ட்	34 கோடி	6250 (கவர்னர் ஜெனரல் சம்பளம்)
தென்னாபிரிகா	26 கோடி	8500 (கவர்னர் ஜெனரல் சம்பளம்)
இந்தியாவிலுள்ள மத்திய மாகாணங்கள்	5 கோடி	6000

இவ்வித்தியாசமும் ஏன் என்றால்,——இந்தியர்களது பணமல்லவா?

பாட்னா, 2—9—1922

கயாவில், இவ்வருஷம் காங்கிரஸ் மகாசபை நடக்கும்போது, ஓர் கதர் காக்ஷியையும் காங்கிரஸ் வரவேற்புக் கமிட்டியார் வைக்கத்தீர்மானித்திருப்பதாய் அறிவிக்கப்படுகின்றது. கையால் நூற்று நெய்யப்பட்ட துணிகளும், பட்டுகளும், கம்பளிகளும் அக்காக்ஷியில் வைக்கப்படும்.

இம்மாதம் 30ம் தேதிவரையில் அவ்வரவேற்புக் கமிட்டியில் மெம்பர்கள் சேரலாம். கயாவுக்கும், புத்தகயாவுக்கும் மத்தியில், பால்குனி நதிக்கரையில், காங்கிரஸ் மண்டபம் கட்டப்படும்.

கல்கத்தா, செப்டம்பர் 5, 1922.

இன்றைய தினம், 11-30க்கு, எழுபத்தேழாவது வயதில், பாபு மோதிலால் கோஸ் காலஞ்சென்றார். ஐம்பது வருஷகாலமாய், " அமிருத பஸார் பத்திரிகை"யில் இவர் உழைத்தார். 1911ம் வருஷத்தில், இவருடைய சகோதரரான, பாபு சிசிர் குமார்கோஸ், தனது தேக அசௌக்கியத்தால், தான் ஸ்தாபித்து வைத்திருந்த அப்பத்திரிகையிலிருந்து விடுதலை யடைந்ததும், அவரது ஸ்தானத்தில் பாபு மோதிலால் கோஸ் அதை நடத்த ஆரம்பித்தார். வெகு சமீபகாலம் வரையில் இவர் பத்திராதிபராய் இருந்தார்.

கல்கத்தா முனிசிபல் சேர்மனும் இவருடைய மரணத்தைப்பற்றி துயரத்துடன் பேசி யிருக்கின்றார்.

பாபு மோதிலால் 1845-ம் வருஷத்தில் பிறந்தவர். தனது சகோதரருடன், 1872 இல் கல்கத்தாவுக்கு வந்து, அங்கே " அமிருத பஸார் பத்திரிகை"யை இருவரும் நடத்த ஆரம்பித்தனர்.

இவருடைய தேக வியோகத்தால் பங்காளத்திற்கே யன்றி, இப்பாரத நாட்டிற்கும் பெருத்த நஷ்டமுண்டாகிவிட்டது.

ஏஷியா மைனரில் கிரீஸ் தேசத்தார் துருக்கர்களால் தோற்கடிக்கப்பட்டார்கள். ஆதலால், பிரிடிஷ், ப்ரெஞ்ச், அமெரிகன் கவர்மெண்டார் அனைவரும், இவ்விருவர்களுக்குள் நடக்கும் யுத்தத்தை நிறுத்த ஆலோசித்து வருகிறார்கள்.

கிலாபத் கமிட்டி ப்ரெஸிடெண்டான ஸேட். சோடாணி பின்வரும் தந்தியை பிரிடிஷ் பிரதம மந்திரியாருக்கு அனுப்பியிருக்கின்றார்:—

" இந்தியாவிலுள்ள மகமதியர்களெல்லோரும், பிரிடிஷ் கவர்மெண்டார் லண்டனிலிருந்து 'ஐரன்ட்யூக்' என்னும் யுத்தக்கப்பலை ஸ்மர்னாவுக்கு அனுப்பியிருப்பதைக்கேட்டு, முற்றிலும் திகைப்புற்றிருக்கின்றனர். இதனால், ஏஷியா மைனரில் துருக்கர்கள் இக்காலத்தில் அடைந்துவரும் வெற்றியைக் கலைப்பதாய் ஆகுமென்றும் அவர்கள் எண்ணுகிறார்கள். பிரிடிஷ் கவர்மெண்டார் எவ்விதத்திலாவது துருக்கர்களை நெருக்க யத்தனம் செய்வார்களேயாகில், அதனால் இந்தியாவிலிருக்கும் மகமதியர்களுக்கு அளவற்ற மனக்கிளர்ச்சியே உண்டாகும். பிரிடிஷ் மந்திரிகள் அவ்வாறு ஒன்றும் செய்யாமலிருப்பதற்கு இப்பொழுதே ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்."

க்ரீஸ் தேசத்தவர் ஜயித்தபொழுது, 'ஸாபாஷ்' என்றவர்கள், "துருக்கர்களுக்கு வெற்றி" யென்றவுடன், மிகுந்த பரபரப்போடு, " யுத்தம் போதும், யுத்தம் போதும்," என்பது சிறிது ஆச்சரியமாயில்லையா?

ஸெண்ட்ரல் ரெயில்வே போர்ட் மெம்பர்களில், ஏழு பிரபுக்கள் இந்தியாவிலுள்ள இருப்புப்பாதைகள் எல்லாவற்றையும் கவர்மெண்டார் தமது ஆதினத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகின்றது. இதற்கு விரோதமாய் நான்கு கனவான்கள் தமதபிப்பிராயத்தைத் தெரிவித்தார்களென்றும், மேலும் அவர்களுக்குள் ஸர். அலெக்ஸாண்டர் மரே, ஸர் மாண்டேகூ வெப், ஸர்.டின்ஷா வாச்சா, இவர்கள் மூவர் ஆவார்களென்றும் சமாசாரம் எட்டுகின்றது.

கூடிய சிக்கிரத்தில், இந்தியா கவர்மெண்டார் இதைப்பற்றித் தீரவிசாரித்துத் தமது முடிவையும் இந்தியா லெஜிஸ்லெடிவ் அஸெம்ப்ளியில், வரும் நவம்பர் மாதம், வெளியிடுவார்கள்.

வரவு செலவு விஷயங்களில் மகா நிபுணரெனக் கீர்த்திபெற்றிருக்கும் ஸர். டின்ஷா வாச்சாவின் இம்முடிவுக்குக் காரணங்களை நாம் முழுமையும் அறிய விரும்புகிறோம்.

ஓர் பிரபுவின் தன்மை

சென்னையில் பல வருஷங்களாய் "லார்ட் பிஷப்"பாக இருந்துவந்த டாக்டர் ஹென்ரி ஒயிட் ஹெட் என்பவர், Mr. லாயிட் ஜார்ஜின் பிரசங்கத்தைப் பற்றிப், பின்வரும் கடிதமொன்றை "மான்சஸ்டர் கார்டியன்" னென்னும் பத்திரிகைக்கு எழுதியிருக்கின்றார். அதில் அநேக விஷயங்கள் அடங்கியிருப்பதால், அக்கடிதத்தைத் தமிழிலும் மொழிபெயர்க்க விரும்புகிறோம்.

"காமன்ஸ் சபையில், I. C. S. உத்தியோகஸ்தர்களுடைய குறைகளைப்பற்றியே இப்போது நடந்திருக்கும் விவாதத்திலிருந்து என்ன வெளியாகின்றது? 1919-ம் வருஷத்திய இந்தியா சீர்திருத்த சட்டத்தின் நோக்கங்களையும், அதின் உட்கருத்தையும் பிரிடிஷ் பிரதம மந்திரியாருங்கூட நேராய் அறிந்துகொள்ளவில்லை. அச்சட்டத்தைப் படைத்தவர்களுக்குள் அவர்தான் பிரதானமாயிருக்கின்றார். ராஜாங்க விவகாரங்களில், ராஜ்யதந்திரிகள் எளிதாகவே எதையும் மறந்துவிடுவது வழக்கம். அப்படித்தான் மறுபடியும் இவ்விஷயத்தில் நடந்துவிட்டது. 1919-ம் வருஷத்தில், பிரிடிஷ் மந்திரிகளும் இந்தியா கவர்மெண்டாரும், ஒரே ஸங்கல்பத்தோடு, அத்தேசத்தவர்கள் சம்பந்தமாய், ஒரு நூதனமான துறையில் இறங்கத் துணிந்தார்களல்லவா? அதற்கு முன் ஒருவரும் நினைத்திராத காரியத்தையே அவர்கள், அப்பொழுது, செய்வதற்கு ஆரம்பித்தார்கள். 1917இல், ஆகஸ்ட் மாதம் 20-ம் தேதியன்று, பிரிடிஷ் பார்லிமெண்டில், Rt. Hon. மாண்டேகூ கூறியிருக்கும் வார்த்தைகளை, மற்றொருதரமும், நான் இங்கெடுத்துரைப்பதில் பாதகமில்லை. அவர் சொன்னதாவது:—

"(இன்றையதினம் முதல்) பிரிடிஷ் கவர்மெண்டார்,(இந்தியா சம்பந்தமாக,) ஓர் கொள்கையை (பகிரங்கமாகவே) ஏற்றுக்கொள்ள விரும்புகின்றனர். இதற்கு இந்தியாவிலுள்ள அதிகாரிகளும் முற்றும் இணங்கியிருப்பது உண்மையே. அவர்களுடைய தேசத்தில், எல்லா அம்சங்களிலும், இந்தியர்களுக்கு மேன்மேலும் ஸ்வய ஆக்ஷி ஸ்வதந்திரத்தை அளித்து; இப்பிரிடிஷ் ஏகாதிபத்தியத்திற்குள், இதர தேசங்களைப் போலவே, இந்தியாவும் ஓர் ஒப்புயர்வற்ற நிலைமையை அடைவதற்கான வழியைக் காட்டுவதுதான் நமது முக்கிய நோக்கமாய் இருக்கின்றது."

"இவ்வார்த்தைகளை பிரிடிஷ் கவர்மெண்டார் எப்பொழுதும் நிறைவேற்றுவதிலேயே கண்ணுயிருப்பவர்களென்றும் உறுதியாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இக்கொள்கை மிகப்புதுமையானதென்பதையும் மறக்கவேண்டாம். அஃதெப்படியென்று விசாரிப்போம். 1919ம் வருஷத்திய சட்டம் எதைக்குறித்துக்கொண்டாடப்பட்டு வருகின்றதெனில், அச்சட்டத்தால் இந்தியர்களுக்குரிய ஸ்வய ஆக்ஷி ஸ்வாதீனத்தை பிரிடிஷ் கவர்மெண்டார் தெளிவாகவே ஒத்துக்கொண்டிருக்கிறார்களல்லவா? இந்தியாவில், எல்லா உத்தியோகங்களிலும், இந்தியர்களையும் கவர்மெண்டார், எவ்வித வித்தியாசமுமன்றியில், ஆங்கிலேயர்களுக்கு சமானமாகவே நடத்தத்தீர்மானித்திருப்பதாய் உரைத்திருந்தாலும் என்ன? அஃதவ்வளவு பெரிதான நோக்கமல்ல. 1857ம் வருஷத்தில், மாக்ஷிமை தங்கிய விக்டோரியா மகாராணியாருடைய மந்திரிகள் செய்திருக்கும் விளம்பரத்திலும், மேலும் 1861, 1892, 1909, இவ்வாண்டுகளில் இந்தியர்களுக்களிக்கப்பட்ட சில ஸ்வதந்திரங்களாலும், அவர்களுக்குப் பிரமாதமாய் நாம் ஒன்றையும் கொடுத்துவிடவில்லை. கவர்மெண்ட் உத்தியோகங்களெல்லாவற்றிலும் இந்தியர்களே எங்கும் வந்துவிட்டாலும், அதனால் பிரிடிஷ் கவர்மெண்டாரின் நோக்கங்கள் 1919ம் ஆண்டுக்குமுன் சிறிதேனும் மாறுதல்கள் அடைந்திருக்கமாட்டா. ஆயின், இத்தருணத்தில், 1909ம் வருஷத்தில் லார்ட் மார்லியைப்போன்றவர்களும் சற்றும் சாத்தியமாயில்லையென எண்ணியிருந்த காரியங்கள் எல்லாம் மிகவும் நியாயமாயிருப்பவைகளென்றே பிரிடிஷ் மந்திரிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. 1919 இல், பிரிடிஷ் கவர்மெண்டார் இந்தியர்கள் ஸ்வாதீனத்தைத் தமது நோக்கமாய் ஒத்துக்கொண்டார்கள். அதற்குமுன் அவர்கள் ஒருபோதும் அப்படிச் செய்ததில்லை."

"1919ம் வருஷத்திய இந்தியா சீர்திருத்த சட்டத்தால், இந்தியர்கள் விஷயமாக இதுகாறும் பிரிடிஷ் பார்லிமெண்ட் மெம்பர்கள் வகித்துவந்த அதிகாரங்களனைத்தும், இந்தியாவிலுள்ள லெஜிஸ்லெடிவ் அஸெம்ப்ளி மெம்பர்களிடம் கடைசியில் அளித்து விடுவதுதான் தமது நோக்கமென பிரிடிஷ் கவர்மெண்டார் ஒத்துக்கொள்ளவில்லையா? பின்பு, I. C. S. இல் உள்ள உத்தியோகஸ்தர்கள் இவ்விந்தியர்களுக்கு பதிலளிப்பதற்கும் கடமைப்பட்டவர்களாவார்களென்பதில் என்ன பிசகு இருக்கக்கூடும்?"

"இம்மகத்தான மாறுதல்களை ஸிவில் ஸெர்விஸிலிருப்பவர்கள் நன்றாய் அறிந்துவிட்டனர். 1857ம் வருஷம் முதல் அவர்கள்தான் அத்தேசத்தில் தமதிஷ்டப்படியே எல்லாவற்றையும் ஆண்டிருக்கிறார்கள்."

* * * *

"இப்பொழுது நான் நிரம்பவும் கவலைப்படுவது என்னவென்றால், I. C. S. இல் இருப்பவர்கள் இனிமேலும் இந்தியாவில் தமது ஸ்திதியை நன்றாகத் தெரிந்துகொண்டு, திருப்தியாயிருக்கவேண்டும்.

* * * *

அஃதல்லாமல், பிரிடிஷ் பிரதமமந்திரியார் சொன்னது போலவே, அவர்களுக்கு எக்காலமும் முன்னிருந்த சலுகையெல்லாம் அப்படியே இருக்குமென்று எண்ணுவதும், மேலும் அவர்களுக்கு முன்பு இருந்த கௌரவத்தை மறுபடியும் நிலைநாட்ட யத்தனிப்பதும், தீமைகளைத்தான் விளைவிக்கும்."

கைங்கரியச் சிறப்பு

பின்வரும் கடிதங்களெல்லாம் மகாத்மா காந்தியால் மணிலால் என்னும் தனதருமைப் புதல்வனுக்கெழுதப்பட்டன.

1.

தொழில் என்பது என்ன?

ஜோஹான்ஸ்பர்க் 7—7—1909

எனதருமை மணிலாலுக்கு, * *

* * * * மேலே என்ன செய்வதென்று பிரமித்து நிற்குங்கால், முன்ஜாக்கிரதையுடன் நீ நடந்து கொள்வது வழக்கமெனச் சொல்லுகின்றாய். ஆயின் உன் ஸ்தானத்தில் நான் இருந்தால், எனது கடமையைச் செய்துதான் முடிப்பேன். இந்தவயதில், தாய் தந்தையருக்கு நீ உபயோகமாயிருப்பதே உன்னுடைய முக்கிய கடமை. மேலும், உன்னால் கூடியவரையில் படித்தறிந்துகொள்ளவும், கிருஷிசெய்யவும் வேண்டும். பிற்காலத்தைப்பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்? அது உன் பெற்றோர்களுடைய பொறுப்பல்லவா? அவர்கள் காலம் முடிந்தபின், அஃதெல்லாம் உனக்குக் காத்துக்கொண்டிருக்கின்றதே! தவிர, இதுவும் நிச்சயம். வக்கீல் தொழிலுக்காவது, அல்லது வைத்தியனது தொழிலுக்காகவாவது உன்னைப் படிக்கவைப்பது என்னுடைய உத்தேசமல்ல. நாமோ ஏழைகள்; ஏழைகளாகவும் எப்பொழுதும் இருக்க விரும்புகிறோம். அன்னவஸ்திரத்திற்காகத்தான் நாம் சம்பாதிக்க வேண்டும்.

* * * * * * எப்பொழுதும் உன் ஞாபகமுள்ளவனாகவே யிருக்கின்றேன். மனிதனுக்கு என்றைக்கும் ஒரே ஒரு தொழில்தான் ப்ரதானமாக இருக்கவேண்டும். அதாவது, அவன் குணத்தில் சிரேஷ்டனாக விளங்குவதற்காகவே எக்காலமும் சிரமப்பட்டு உழைப்பது அவசியம். முற்றும் சம்பாதிக்கவேண்டுமென, நீ ஒன்றையும் முக்கியமாய்க் கற்றுக்கொள்ள வேண்டியதில்லை. ஜீவகாருண்யமென்ற தர்மத்தைக் கைவிடாதவர்கள், சோற்றுக்கில்லாமல், ஒருபொழுதும் நசித்ததில்லை. அப்படியே மரிக்கவேண்டுமென்றாலும் அவர்கள் சிறிதும் கலங்கமாட்டார்கள். வீணாக அலட்டிக்கொள்ளாதே. உன்னால் கூடியமட்டும், படிக்கவும். உன்னைக் கண்ணாறப்பார்த்து, என்னுடன் அணைத்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகிலும் இப்போது அது சாத்தியமில்லாததால், என் கண்களில் நீர் ததும்பி நிற்கின்றது. உன் "பாபு" உன்னை அப்படி விட்டுவிடுவாரா? நான் செய்வதெல்லாம், உனது நன்மைக்கே. பிறருக்கும் நீ உபயோகமாயுள்ளவரையில், உன்னை யார் அலக்ஷியம் செய்வார்கள்?

2.

இக்கட்டை பெரிதல்ல

ஜோஹான்ஸ்பர்க் 7—9—1909.

என்னருமை மணிலாலுக்கு,

படிப்பென்றால், பிறருக்குப் பிரயோஜனமுள்ளவனாயிருப்பதையும், இன்னும் அவர்களுக்கு ஹிதத்தைச் செய்வதையும், மேலும் அதைச் செய்வதில் முற்றிலும் அகங்காரமற்று இருப்பதையுங் காட்டிலும் வேறு உயர்ந்த படிப்பும் இருக்கின்றதோ! இதின் உண்மை, வயதாக ஆக, உனக்கே நன்றாய் விளங்கும். வியாதிகளால் நொந்தவர்களைப் பராமரிப்புடன் போஷித்து வருவதைப் பார்க்கிலும் எனக்கொன்றும் நேர்த்தியாகத் தோன்றவில்லை. ஸதாசாரம் என்றால், இதுதான். இதுவே ஸதாசாரத்தின் சாராம்சமாயிருக்கின்றது.

ஜீவாத்மாவைக் காட்டிலும் சரீரத்தையே பெரிதாய் நினைப்பதாகாது. ஆத்மாவை யறிந்தவர்கள், அஃதொன்று தனியாக இருப்பதை உணர்வார்கள். பிறருக்கு ஹிம்சையைச் செய்தாவது, அவர்கள் சரீரபோஷணத்திலேயே கருத்துள்ளவர்களாயிருக்கமாட்டார்கள். காரியத்தில் இதை நடத்துவது கஷ்டம்தான். ஆகிலும், நிஷ்களங்கமாய் இருப்பவர்கள் இதின் மேன்மையைக்கண்டு, இதைக் காரியத்திலும் செய்து முடிப்பார்களென்பதில் சந்தேகமேயில்லை. சரீரத்தின் நிமித்தமே, ஜீவாத்மா விஷயமாய், பாபமென்றும் புண்ணியமென்றும் எண்ணாமலிருப்பதில் தோஷமில்லையென்பார்கள்; ஆயினும் அது தவறு. நமது ஆசைகளையும் அடக்கி ஆளுவதற்காகத்தான் இக்கட்டையை நமக்கு அவர் அளித்திருக்கிறார்.

3.

உண்மையே கல்விச் செல்வம்.

ஜோஹான்ஸ்பர்க் 12—10—1909.

எனதரிய மணிலாலுக்கு,

Mr. வெஸ்ட் முதலியவர்களுக்கு இப்போது இப்பணிவிடை நீ செய்து வருவதுதான் மிகவும் உத்கிருஷ்டமான படிப்பாகும். எவனொருவன் தனது தர்மத்தைக் கைவிடாது நடத்துகின்றானோ அவனே பெரிய பண்டிதனாவான். உன்னுடைய பாடங்களை நீ துறந்துவிட்டதாய் எழுதுகின்றாய். ஆகிலும் நான் அப்படி நினைக்கவில்லை. புஸ்தகங்களை ஸந்தேகமறக் கற்றுவருவதால், அது படிப்பாகிவிடுமா? இல்லை, இல்லை. மற்றவர்களுக்கு சுசிரூஷை செய்வதுதான், உண்மையான படிப்பாகும். உனது புஸ்தகங்களைத் தொடவும் உனக்கு அவகாசமில்லையென்கிறாய். அதனால் ஒரு பாதகமுமில்லை. பிற்பாடு படித்துக்கொள்ளலாம்; ஆயின், பணிவிடைசெய்வதற்கு, இப்படிப்பட்டதோர் காலமும் வரவேண்டுமே!

பரிசுத்தமான மனதுடன், பிறருக்கு ஹிதமாயிருப்பதிலேயே கண்ணும் கருத்துமுள்ளவனாக இருக்கும்வரையில், பிணிகளொன்றும் உன்னிடம் அணுகமாட்டாது. * * * இப்படித்தான் நாமிருவரும் முக்தர்களாய் ஆகவேண்டும். பிறரிடம் உண்மையாயிருக்கக் கற்றுக்கொள்ளவும். அதுதான் படிப்பு. மற்றதெல்லாம் மடிப்பதே.

4.

"பாபு வகுப்பில்!—"

ஜோஹான்ஸ்பர்க் 22உ—10—1909.

எனதன்புள்ள மணிலாலுக்கு,

பிறர் உன்னை, "நீ எதில் படிக்கிறாய்?" என்றால், அதற்காக நீ ஏன் சங்கடப்படவேண்டும்? இனிமேல் உன்னை யார் கேட்டாலும், "பாபு வகுப்பில் படிக்கின்றேன்," என்று சொல். படிப்பைப்பற்றியே எப்பொழுதும் இவ்வாறு ஏன் கவலைப்படுகின்றாய்? வயிறு வளர்ப்பதற்காகக் கல்வியும் ஏற்பட்டிருப்பதென்று எண்ணுவது அழகல்ல. ஈசுவரனுடைய சிருஷ்டியில், ஒவ்வொன்றுக்கும் அன்னாகாரத்திற்கு அவன் வழிசெய்திருப்பதையும் நாம் பார்க்கவில்லையா? தச்சுவேலை கொத்துவேலை முதலியவைகளாலும் ஒருவன் பிழைக்க முடியும் என்பதை ஏன் மறந்துவிடுகிறாய்! தேசகைங்கரியத்திற்காகக் கற்றறிய வேண்டுமென்றால், அக்கல்வியானது முன்னமேயே உனது வசத்தில் இருக்கின்றது. அல்லது தன்னைத்தானே செவ்

வையாய் அறிந்துகொள்ள நினைப்பாயாகில், அப்பொழுது நீ ஒருவருக்கும் ஹிம்ஸைசெய்யாமலிருக்கவேண்டும். உன்னைப் பரமஸாதுவென்று எல்லோரும் கொண்டாடுகின்றனர். இவ்வழியிலேயே மேன்மேலும் உயர்வு பெறுவாயாக. உன்னால் முடிந்ததைமட்டும் இப்போதுசெய். வருங்காலத்தைப்பற்றி நாம் பிற்பாடு யோசித்துக்கொள்வோம். உன்விஷயமாய் அக்கரை பாராட்ட நான் ஒருவன் இருப்பதை நீ முழுவதும் நம்பினால், பின்பு உன்னைப்பற்றிய விசாரம் எல்லாம் உனக்கெதற்காக?

5.
தர்மம்

ஜோஹான்ஸ்பர்க் 10—8—1909.

என் பிரியமுள்ள மணிலாலுக்கு,

இப்பொழுது சமீபத்தில் கொஞ்சமேனும் ஓழிவுகாலம் ஏற்படக்கூடுமென்று நான் எண்ணவில்லை. இன்று, செவ்வாய்க்கிழமைதினம், இக்கடிதத்தை நான் உனக்கு எழுதநேர்ந்தது; மேன்மேலும் இன்னும் அதிகமாகவே நான் உழைக்க நேரிடுமென்று நம்புகிறேன். * * * *

படிப்பு விஷயமாய் அதிகமான சௌகரியங்கள் இங்கே இருக்குமுடியுமென்றும் நான் நினைக்கவில்லை. இங்கு அளிக்கப்பட்டுவரும் கல்வியிலும் குறைவுகள் பல இருக்கின்றன. ஆகிலும், நீங்களனைவரும் இங்கே ஸ்வல்பகாலம் வந்திருக்கலாம். நமது கடமையை நாம் செய்துதான் முடிக்கவேண்டும். எதுவரினும், வரட்டும்.

* * * * *

K.———க்குப் புருஷப்பிரஜை பிறந்திருப்பது பற்றி நிரம்பவும் சந்தோஷம். ஆகிலும், இதின் சம்பந்தமாய் எனது அபிப்பிராயங்கள் எல்லாவற்றையும் நீ அறிவாய். * * * *

நமது தேசத்தைப்பற்றி ஆலோசிக்குங்கால், பெரும்பான்மையோர் விவாஹம்செய்து கொள்ளக்கூடாதென்பதே எனது சித்தாந்தம். விவாஹமெனில், அதின் கருத்தும் மிக்க ஆழ்ந்ததாகவே காணப்படுகின்றது. சுகத்திற்காக விவாகம் செய்துகொள்கின்றவர்கள் மிருகங்களைக்காட்டிலும் தாழ்ந்தவர்களென்றுதான் என்னுகிறேன். சுருதிகளின் ஆணைப்படி, பிரஜைகளுக்காகவே ஸமாகமம் யுக்தமென்று தோன்றுகின்றது. சுருதிவாக்கியங்கள் சரியென நாம் ஒத்துக்கொண்டால், இக்காலத்தில் நமக்குப் பிறக்கும் குழந்தைகளெல்லாம் சாஸ்திரோக்தமாய் உண்டானவைகளல்ல. இதனால்தான் மனிதர்கள், இகழப்பட்டுத், துயரமடைகின்றார்கள்.

6.
குணத்தைக்கொள்

என்னன்புள்ள மணிலாலுக்கு,

தவறுதல்களைப் பார்க்கும்பொழுதெல்லாம், நீ எனக்கு அவைகளை ஞாபகப்படுத்துவது முற்றும் நியாயமே. ஆயினும், ஒவ்வொன்றிலும் உள்ள குணங்களையே நீ முக்கியமாய்க் கொண்டாடவேண்டுமென விரும்புகிறேன். நமக்குள் யாரிடத்தில்தான் குறைகளில்லை? ஆதலால், மனிதர்களுடைய மேன்மைகளை நாம் ஏன் மனனம் செய்யக்கூடாது? இதில் ஒன்றும் உனக்காக்ஷேபணைகள் இல்லாவிட்டால், இதையே உன் வழக்கமாக ஆக்கிக்கொள்ளவும். * * * *

ஆகிலும், அதுவரையில் உன் மனதில் படும் குற்றங்களையெல்லாம், நீ எனக்கெடுத்துச்சொல்வதில் ஒருதடையுமில்லை.

ஆக்க முடியாததற்குக் காத்துத்தான் ஆகவேண்டும். உன்னுடைய கடமைகளைச்செய்து முடிப்பதிலேயே அளவற்ற சந்தோஷத்தை அடைவாய். நமது பொறியை நாம் தீர்த்துக்கொள்வோம். பிறரைப்பற்றிய கவலையும் நமக்கேன்? தமது கடமையைச் செய்வதும், செய்யாததும், அவர்களைப் பொருத்ததல்லவா? அஃதல்லாமல், நாம் அவ்வாறு தோஷமாய் நினைப்பது கர்வமடைந்ததாகவே முடியும்.

7.
பேராற்றல் (Character)
வறுமையின் இன்பங்கள்

ப்ரிடோரியா ஜெயில், 25—3—1909

எனதருமை மணிலாலுக்கு,

* * * * *

ஜெயிலில் இப்போது நான் பல விஷயங்களைப் படித்துத் தெரிந்துகொண்டேன். எமர்ஸன், ரஸ்கின், மாஜினி இவர்களெழுதிய புஸ்தகங்களையும், உபநிஷத்களையும் பார்த்துக்கொண்டுவருகிறேன். "படிப்பென்றால், அது குணம்தான்," என்று நான் இதுகாறும் எண்ணி வந்தது உண்மையேயென இத்தருணத்தில் நன்குப் புலப்படுகின்றது. கேவலம் புஸ்தகப்படிப்பு மாத்திரம் எள்ளளவும் பிரயோஜனமில்லை. மேலும் அப்படிப்பட்ட எனதெண்ணம் நிஜமாகில், நீ நிரம்பவும் படித்தவனாவாய்.

நாதராம்ஜி என்பவர் உபநிஷத்களுக்கெழுதியிருக்கும் முகவுரையில், நான் கண்டதோர் விஷயமானது என் மனதைத் தன்வசப்படுத்தி விட்டது. ஆரம்பத்தில் விதிக்கப்பட்டுள்ள பிரம்மசரிய ஆசிரமும், கடைசியில் ஏற்படுத்தப்பட்ட ஸன்யாஸாசிரமும் முழுவதும் ஒன்றேயென அவர் கூறுகின்றார். அது முற்றிலும் சரியென்றுதான் எனக்குத் தோன்றுகின்றது. இளமைப் பருவத்தில், பன்னிரண்டாம் வயது பரியந்தம், சுகமாய்க் காலங்கழிப்பதில் பிசகில்லை. ஆயின், நினைவு தெரிந்தபின் ஒவ்வொருவனும் தனது பொறுப்பை வகிப்பதற்குக் கற்றுக் கொள்ளவேண்டும். வயது வந்த பிறகு, மனோ, வாக்கு, காயம் இம்மூன்றிலும் பிருந்த பரிசுத்தத்தோடு, இந்திரியங்களை ஜயித்து, தபஸில் ஜன்மத்தை செலவழிப்பது அவசியமானது. அதைக் கஷ்டமெனப் பாராட்டாமல், மிக்கக் களிப்புடன் ஏற்றுக்கொள்ளவும் வேண்டும்.

ராஜகோட்டையில், எனது பாலியத்தில் நான் எப்படி இருந்தேனென்பது ஞாபகமிருக்கின்றது. உன்னைப்பார்க்கிலும் சிறியவனாயிருக்கும்போது, என் தந்தையாருக்குப் பணிவிடை செய்வதில் எனக்கு மிகவும் உத்சாகமுண்டு. பன்னிரண்டு வயது முதல், ஒரு நிமிஷமேனும் நான் இன்பம் அனுபவித்ததில்லை. நீயும் தர்மத்திலேயே சிந்தையுள்ளவனாய், தார்மிக சிரேஷ்டனாகவும் வளர்ந்தால், என் மனதுக்கிசைந்த லோகோத்கிருஷ்டமான படிப்பைப் பெற்றவனாவாய். ஸத்யம், தபஸ் முதலிய குணங்களால் பேராற்றல் அடைந்தவனாக, இவ்வுலகத்தின்கண் எந்த மூலையிலாவது, முடுக்கிலாவது, உன்னால் பிழைக்க முடியும். அத்துடன், நீ மோக்ஷத்தையும் அடைவாய்.

ஸாஹித்யம் முதலானவைகளில் நீ தேர்ச்சியடையக் கூடாதென்று நான் எண்ணவில்லை. ஆகிலும், அவ்வளவாக அதற்கு அவசரமில்லையென்றே நினைக்கின்றேன். * * * *

இக்ஷணத்தில் பிறருக்குப் பிரயோஜனமாயிருக்க நீ முக்கியமாய்க் கற்றுக் கொள்ளவேண்டும்.

வறுமைதான் இனி நமக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றது. அதை ஒருபொழுதும் நீ மறக்கக் கூடாது. இவ்வுலகத்தைப்பற்றி நான் தீவிரமாக ஆராய்ந்து பார்க்கும்பொழுது, இஃதொன்று என் மனதில் தெளிவாய்ப் படுகின்றது. ஏழையாயிருப்பதில்தான் ஆறுதல்கள் காணப்படுகின்றன. ஐசுவரியத்தையும், சௌக்கியத்தையும் பார்க்கிலும், வறுமையின் இன்பங்களே எனக்கு மிக்க இனிமையாகத் தோன்றுகின்றன.

8.

இறப்பதில் துக்கமில்லை.

ஜோஹான்ஸ்பர்க் 21—5—1908

என்னன்புமிகும் மணிலாலுக்கு,

உன் கடிதம் கிடைத்தது. என்னைப்பற்றி நீ ஏன் வீண் கவலைப்படுகிறாய்? என்னையே நான் முழுவதும் ஆத்மத்தியாகம் செய்வதவசியமாயிருக்குமென்றே நம்புகிறேன். ஜெனரல் ஸ்மட்ஸ் அப்படிக் கடைசியில் ஈம்மை மோசம் செய்துவிடமாட்டார். * * * *

G.———இறந்ததால், அவனைப்பிடித்த சனி தொலைந்தது. இறந்து போவதைப்பற்றி நாம் ஏன் துயரப்படவேண்டும்? இவ்வுலகமெல்லாம் ஒரு காலத்தில் யமனுக்கு இரையாகவேண்டுமல்லவா? பின், நான் இறந்துவிடுவேனென்று நீ துக்கப்படுவதும் பிசகென்று ஒத்துக்கொள்வாய். என் கண் மூடும்வரையில், அதர்மமாயிருப்பதொன்றையும் நான் செய்யாமலிருக்க வேண்டுமென்றே பிரார்த்திக்கின்றேன். அப்படி ஒன்றும் நேராமலிருக்கும்படிப் பார்த்துக்கொள்ளுவதும் உன்னுடைய கடமையாகும். முக்தனுகும் ஸ்திதியில் நான் இத்த க்ஷணத்திலில்லை. ஆகிலும், இப்பொழுது நான் உயிர்துறக்க நேரிட்டால், மறு ஜன்மத்திலாவது நான் நிச்சயமாகவே மோக்ஷமடைவேன்.

பைங்கிளி இரங்கல்

மனதிலொன்றும் வாக்கிலொன்று மாயிருக்கும் மாந்தர்களின் கூட்டத்தில் வெறுப்படைந்து, விலங்குகளோடு சிறிது காலம் கழிக்க நினைந்து, ஒரு நாள் மிருகங்கள் வைத்திருக்கும் காக்ஷித்தோட்டத்திற்குச் சென்று உலாவிவருகையில், பறவைகளிருக்கும் ஒரு பெரிய கூட்டைக் கண்டு, அதிலுள்ள பலவர்ணமான கிளிகளையும், புறாக்களையும், வான்கோழிகளையும் நோக்கிக் களிப்புற்று, அருகில் நின்றேன். அவைகளில் சில உணவைக் கொறித்தும், சில நீரைத் தட்டங்களிலிருந்து குடித்தும், சில அங்கமைக்கப்பட்டுள்ள கிளைகளிலும் சக்கரங்களிலும் ஏறிவிளையாடியும், சில அறையிலுள்ள நீர்தொட்டிகளில் இறங்கி விளையாடியும் காலம் கழிப்பதைப்பார்த்து, இப்பறவைகளிலும் பாக்கியமானவை வேறு உண்டோவென வியப்புற்றிருக்கையில், ஒரு பசுங்கிளி விசையோடு பறந்து கூட்டின்பக்கத்திலுள்ள கம்பிகளை மூக்கினால் கடித்து, சிறகுகளால் அடிக்க ஆரம்பித்தது. அது கோபங்கொண்டு இவ்வாறு செய்வதற்குக் காரணமென்னவென்று தோன்றாது திகைப்புற்றிருக்கையில், உள்ளிருந்த கருத்த புறவொன்று, கழுத்தையழகாய் அசக்கிக்கொண்டு, கண்களைப் புரட்டி, மெல்லிய குரலோடு பேச ஆரம்பித்தது. பக்ஷிகளின் பாஷையறிந்த நானும் கேட்டுநின்றேன்.

புறவு: "ஏ, சுகவர்மா, உன் பெயருக்கொத்தபடி, வர்மங்கொண்டு, இவ்வாறு ஸாகஸம் செய்வது தகாது; அன்றியும், பயன்படாது. இவ்வறையில் நமக்கு யாதொரு குறைவுமில்லாதிருக்க, இதை விட்டு ஓட எண்ணி இரும்புக்கம்பிகளைக் கடித்துவிட விரும்புவது, நினது அறிவின்மையைக் காட்டுவதன்றி, பயன்படுமா? நீ இவ்வாறு செய்வதால் காவலாளர்கள் மற்றவர்களையும் அதிக கண்டிப்பாய் நடத்துகின்றார்கள். நமக்குக் கிடைத்திருப்பதைக்கொண்டு திருப்தியடைவதில்லாமல் இவ்வாறு செய்வதினால் பயனில்லையே, உன்னைப்பார்க்கிலும் வயதிலும் வலிமையிலும் பெரியவனான சுவேதன் திருப்தியடையவில்லையா? உனக்கு வந்த கேடென்ன?"

இவ்வாறு சொல்லி நிறுத்தியவுடன், அவ்விடத்தில் கண்களை மூடிக்கொண்டிருந்த சுவேதனென்னும் வெள்ளைக்கிளி பின்வருமாறு கூறிற்று.

சுவேதன்: "என் நண்பன் புறவன் சொல்லியதே சத்தியம். இவ்வுலகில் திருப்தியே நமது சுகத்திற்குக் காரணமாகும். அதிருப்தியே அசௌக்கியத்திற்கு ஹேதுவாகும். முதலில் நாம் கானில் சுவதந்திரத்தோடு உலாவி வந்தபொழுது இரைதேடும் சிரமத்தையும், நம் பகைவர்களது உபத்திரவத்தையும் பொறுக்காது, சுலபமாகக் கிடைக்கும் உணவுக்கு ஆசைப்பட்டு இவ்வறையில் வந்துசேர நேர்ந்தது. அப்பொழுதே ஆசையை ஒழித்திருந்தால், இவ்விடத்தில் வந்திருக்க மாட்டோம். இங்கு வந்த பிறகு, மறுபடியும் வெளியேற ஆசைகொண்டால், கெடுதிகள்தான் நேரிடும். நானும் இளமையில் பறப்பதில் ஆவல் கொண்டவன். ஆனால் தற்காலத்திற் கேற்றபடி நடந்துகொள்வதுதான் அறிவுக்கடையாளம். இப்பொழுது நாம் சமாதானமாய் நம் காவலாளர்களுக்கு நம்முடைய நல்ல சுபாவங்களைக்காட்டி, அவர்களால் இக்கூட்டைப் பெரிதாக்கிவிடும்படிச் செய்வதே உபாயமென நினைக்கிறேன். உமக்கென்ன தோன்றுகின்றது,——நடமயிலே?" யென்று வான்கோழியைப்பார்த்துக் கூவிற்று.

உடனே வான்கோழியும் தனது சிறகுகளையும் தோகையையும் விரித்துக் காட்டித், தலையை எழுப்பிக்கொண்டு, கூச்சலிட்டதாவது,

நடமயில்: "பறப்பதினால் வருங்கேடுகள் அநேகமென்றெண்ணியே, நான் நெடுநாளாய், என் சிறகுகள் பெரிதாயிருந்தும், அவைகளை உபயோகப்படுத்தாது நிறுத்திவிட்டேன். அதினால் நான் அடைந்த பலன்களென்னவென்று எடுத்துரைப்பேன். காவலாளர்கள் என்னை அடிக்கடி, நான் ஓடிப்போவேனென்ற பயமில்லாமல், வெளியே அழைத்து உலாவ விடுகின்றனர். ஆகையால் நமது சிறகுகளே நமக்குத்தீமை விளைவிக்கும். அளவுக்கு மிஞ்சினால், அமிருதமும் நஞ்சாகுமென்று கேள்விப்பட்டதில்லையா? நமது பறக்கும் தன்மையை சிறுகச்சிறுக மாற்றிக்கொள்வதே தக்கதென்று தோன்றுகிறது. அதினாலேயே நாம் சுகமடையலாம். இப்பொழுது நமக்கு நடக்கும் உபசாரங்களைவிட இன்னுமதிகமாகவே நடக்குமென்பதிற் சந்தேகமில்லை. இதோ நண்பன் புறவனுடைய நல்லகுணத்தைக்கண்டு காவலாளர் அவனை தினந்தோறும் விசும்பிற் பறக்கவிட்டு, அவனும் காவலாளர்களும் மனங்களிப்படைதப் பார்க்கவில்லையா? அப்படியே சுகவர்மனும் சௌக்கியம் அடையலாகாதா?" என்று வான்கோழி கூவி நிறுத்தியவுடன், பசுங்கிளி மற்ற எல்லா பறவைகளை நோக்கிப் பின்வருமாறு மொழிந்தது.

சுகவர்மன்: "நண்பர்களே, சகோதரர்களே, நீங்கள் இப்பொழுது சொல்லியதெல்லாம் நான் அறியாதவையல்ல. இக்கூட்டின் அழகும், அதிலுள்ள சுகங்களும் என் மனதைக் கூட ஒருகாலத்தில் வசப்படுத்தியதென்றால், அவைகளின் பெருமையைப்பற்றி வேறுசொல்லவும் வேண்டுமோ! என்னையறியாமல், ஏதோ என் மனம் இக்கூட்டிற் சேர்வதற்கு முன்னமிருந்த நிலைமையிலேயே ஆழ்ந்து கிடக்கின்றது. கடவுள் நமக்கு அழகிய சிறகுகளையும் இனிய குரலையும் கொடுத்த பொழுதே யதேச்சையாக ஆகாயத்திற் பறந்து, பழங்களையும் துளிர்களையும் கோதித்தின்று பெட்டையுடன் விளையாடிக்காலங்கழிப்பதில் ஆசையை உண்டாக்கிவிட்டார். நண்பர் சுவேதர் சொல்லியபடி துராசையால் நமது சுவதந்திரத்தை ஒரு சிற்றுண்டிக்காகப் பறிகொடுத்தோம். ஆனால் அவர் சொல்லியபடி இப்பொழுது நாம் நம்முடைய குலதர்மத்தில் ஆசைகொள்வது தகாதென்று நான் நினைக்கவில்லை. ஆனாலவ்வாறு செய்வதினால் நமது கோரிக்கைகள் உடனே நிறைவேறுமென்றாவது, அல்லது கஷ்டங்களும் நேரிடாமலே இருக்குமென்றாவது நான் எண்ணவில்லை, கஷ்டமின்றி சுகம் கிடைக்கமாட்டாது, நாம் துராசைப்பட்டதற்குப் பிராயச்சித்தமாக இக்கஷ்டங்களை அனுபவித்தால்தான் சுகங்கிடைக்கும். திருப்தியே சுகத்திற்கு ஆதாரமாயுள்ளதென்று புறவன் சொல்லியது நிஜம்தான். ஆனால் அவர் சொல்லியபடி நமது துர்மதியால் வந்த துன்பங்களில் திருப்தி யடைவது தகாது. அவைகளை சகித்துக்கொண்டு, இடைவிடாமல், நமது குலதர்மத்தில் மனதைப்பதித்து, அதில் திருப்தியடைவது தான், நமக்கேயன்றி, நம் குலத்தவர்கட்கெல்லாம் இன்பம் விளைவிக்கும். நீங்கள் எவ்வாறு சொன்னாலும், என் மனம் அதைவிட்டு விலகுமென்று எண்ண வேண்டாம். அதன்றியும், நாம் எவ்வளவு சாந்தமாக இருப்பினும், இக்கூட்டிலிருந்து விடுபடுவோமென்றாவது, அதைப பெரிதாக்குவார்களென்றாவது, நினைக்கவில்லை. நேற்றையதினம் காவலாளர்கள் பேசிக்கொண்டிருந்ததை கவனிக்க வில்லையா? நமக்கு இப்பொழுது செய்திருக்கும் பந்தோபஸ்து போதாதென்றும், இன்னும் வெளியிலுள்ள பறவைகள் நமது கூட்டிற்கருகில் வராதிருக்கும் வண்ணம், வெளியில் கொஞ்ச தூரத்தில் இன்னொரு மதில் இரும்புக்கம்பிகளால் கட்டப் போவதாகச் சொன்னார்களே! அதோ, நமது நண்பன் பஞ்சவர்ணன் வருகிறான். அவன் கூட்டிற்குள் வந்தபிறகு அவனையும் கேட்போம்," என்றவுடன், காவலாளன் கதவைத்திறந்து பஞ்சவர்ணக்கிளியொன்றை உள்ளே கொண்டுவிட்டான். அது வந்தவுடன் முன்னர் கூட்டில் நடந்த சமாசாரங்களை சுருக்கமாய்ச் சொல்லக்கேட்டு, முகம் வாடி, துயரங்காட்டிச், சொல்லத்தொடங்கிற்று.

பஞ்சவர்ணன்: "நான் காவலாளர்களுடைய எண்ணம். இவ்வாறாய் இருக்குமென்று நினைக்கவில்லை. ஆனால் அவர்கள் சுகவர்மனுடைய நடத்தையினால் கொஞ்சம் கலங்குகிறார்களென்று மாத்திரம் நினைத்தேன். நான் அதிபதி அரண்மனையில் நடந்த விருந்துக்குப் போயிருந்தபொழுது, என்னை பேசச் சொல்லிக் கேட்டார்கள். என்னை மனிதனென்றே நினைத்ததல்லாமல், மறுபிறப்பு உண்டென்று கூட நம்பிவிட்டார்கள். நான் முன் பிறப்பில் பெரிய பண்டிதனாயிருந்திருக்கவேண்டுமென்றே தீர்மானித்தார்கள். அவர்கள் தங்களுக்குள் உண்டாயிருந்த கலகங்களைக்கூட, என்னைக்கொண்டே தீர்த்துக்கொள்ளவும் விரும்பினார்கள். அச்சமயத்தில் நானும் நம்மவரது குறைகளைத் தெளிவாய் எடுத்துரைத்து, இங்கு சுகவர்மனுடைய அபிப்பிராயங்களை அனுசரிப்பவர்கள் யாரும் இல்லையென்றும், அவனொருவனே கூட்டிலிருந்து வெளியேறுவதற்கு ஆசைகொண்டவனென்றும், அதனால் கூட்டிற்கு அபாயமில்லையென்றும், மேலும் இக்கூட்டைப் பெரிதாக்குவது அவசியமென்றும், தெரியப்படுத்தினேன். அவர்களும் அதற்கு ஒருவாறாக இணங்கினார்கள். இப்பொழுது காவலாளர்கள் செய்யும் யோசனையைக் கேட்டால், அதற்குமாறாகவே இருக்கின்றது. நாம் பொறுமையுடனிருந்து, அவர்களோடு விஷயங்களைப் பற்றிப் பேசித் தீர்மானிக்கவேண்டும். வீணாய் அவசரப்படுவதில் பயனில்லை. இன்னும் நான் அதிபதி அரண்மனையில் இருக்கையில், அங்கே வந்திருந்த அவருடைய இனத்தார்கள் என்னை அவர்களுடைய வீடுகளுக்கு அழைத்துச் சென்று, உபசரித்துப், பேசச்சொல்லிக் கேட்டு ஆனந்தமடைந்தார்கள். ஆங்காங்கு கிள்ளைகள் கூட்டில் வைக்கப்பட்டிருந்ததைப்பார்த்து, அவைகளைக் கொஞ்சநேரமாவது வெளியில் எடுத்துப் பறக்கவிட்டு, கூட்டில்விடவேண்டுமென்றும், அதினால் அவைகளுடைய இயற்கை குணமாகிய பறக்கும் தன்மை மறவாமலிருக்குமென்றும் சொன்னேன். அவர்களும் அவ்வாறு செய்வதில் தங்களுக்கு ஒருவிதத்திலும் ஆக்ஷேபணையில்லையென்றும், ஆனால் அவ்வாறு வெளியில் யதேச்சையாய் விடுவதில் பறவைகள் வீடுகளில் எச்சமிட்டு, ஆபாசப்படுத்துவதுமல்லாது, அவைகளும் பூனைகளுக்கு இரையாகிவிடுமேயென்ற பயந்தான் இருக்கின்றதென்றும் சொன்னார்கள். நானும் அவர்கள் கூறியகாரணம் சரியென நினைந்து, ஓர் உபாயம் சொன்னேன். தனியே போகவிடாமல், மாந்தர்கள் கூடிப்பேசுமிடங்களில், கிள்ளைகளையும், அருகில், கூட்டிலிருந்து கொண்டுவந்து வைத்துக்கொண்டால், அவைகள் பேச்சைக் கற்றுக்கொள்ளுவதுமல்லாது, அபாயமன்றியில், கொஞ்சம் பறந்து உலாவக்கூடும். முதலில் சில காலத்திற்கு ஒருபெரிய கயிற்றைக்காலில் கட்டி வேண்டுமானாலும் வைக்கலாமென்று கூறினேன். அதற்கு அவர்கள் இசைந்தார்கள். நான் மனங்களித்து இங்கு வந்தேன். நமது காவலாளர்களுடனும் பேசி, அவர்களை நம்வசப்படுத்தலாமென்று எனக்குப்பூர்ணமான நம்பிக்கையுண்டு. நீங்கள் கவலைப்படவேண்டாம்," என்றவுடன் எல்லாப்பறவைகளும் களிப்போடு கூவின. பசுங்கிளியொன்றுமாத்திரம், தலைகுனிந்து, முகம்வாடி, ஒதுங்கிநின்றது.

இவைகளைக்கேட்ட நானும் பறவைகளுடைய பாக்கியத்தை நோக்கி இன்புற்றது சரியல்லவென்றும் நினைந்து, அவைகளும் மாந்தரைப்போலவே லோப மோக மத மாத்ஸர்யங்களால் அலைப்புண்டு கிடக்கின்றனவென்று தீர்மானித்து, தோட்டத்திலிருந்து வீடு சென்றேன்.

—"ராமசந்திரர்"

எல்லாம் ஒன்றுதான்

செடிகளும் ஸத்தை எப்படி இழுத்துக் கொள்ளுகின்றன?

[மனிதர்களைப்போலவே, செடிகளுக்கும் பிராணன் இருக்கின்றதென்று ஸர். ஜகதீச சந்திர போஸ் காண்பித்திருக்கிறார். சப்பத்தில் இங்கிலண்டிலுள்ள "மான்செஸ்டர் கார்டியனெ"ன்னும் பத்திரிகைக்கு, அவர் ஓர் அருமையான வியாசம்

எழுதியிருப்பதில், "செடிகளும் ஸத்தை எங்கிருந்து, எப்படி இழுத்துக்கொள்ளுகின்றன,"வென்று தான் புதிதாய்க்கண்டுபிடித்திருப்பதை வர்ணித்திருக்கின்றார். அதை நாம் இங்கே ஒருவாறு எடுத்தெழுதுகிறோம்.]

பூமியிலிருந்துதான் செடிகளும் தமது ஆகாரத்தை ஸம்பாதித்துக்கொள்ளுகின்றன. வேர்களின் வழியாகத் தரையிலிருந்து ஜலத்தை இழுத்து, மரம் முழுவதும் பாயச்செய்து, கடைசியில் இலைகள் வழியாய் அத்தண்ணீரை ஆவியாகவும் மாற்றிவிடுகின்றன. இப்படிப் பிரதிதினமும் ஏராளமாகவே ஜலமானது மரங்களுடைய உச்சி வரையிலும் இழுக்கப்பட்டு வருவதில் சந்தேகமில்லை. பெரிய விருக்ஷங்களில் ஒவ்வொருநாளும் நூறு பவுண்ட் நிறையுள்ள ஸத்தானது மேலே ஏறக்கூடும். 450 அடி உயரமாயிருந்தாலும், மரங்கள் தமது சக்தியினாலேயே ஜலத்தை உறிஞ்சுவது வழக்கம். 400 அல்லது 500 அடி உயரத்திற்கும் ஸத்தை இழுத்துக்கொள்வதென்றால், அதற்குள்ள திடமும் விருக்ஷங்களுக்குப் பிரமாதமாகத்தான் இருக்கவேண்டும்.

கிணறு முதலியவைகளிலிருந்து 34 அடிக்கு மேல், நாம் தலைகீழாக நின்றாலும், யந்திரங்களில் ஜலம் மேலே கிளம்புவது ஸாத்தியமில்லை. பலர் இவ்விஷயத்தை நன்றாய் அறிந்திருக்கலாம். (தரை மட்டத்திற்குக்கீழ், கிணற்றுக்குள் இருக்கும் ஜல மட்டமும் 40 அல்லது 50 அடி தூரம் இருந்தால், அக்கிணற்றில் யந்திரங்கள் வைப்பது மிகவும் சிரமமாய் இருக்கும்.) அப்படியிருக்கையில், செடிகளும் கொடிகளும் தமது ஸத்தை 500 அடி உயரத்திற்கும் எவ்வாறு கிளம்பச் செய்கின்றன? நம்மிடத்தில் இல்லாத யந்திரங்கள் இவைகளிடம் என்ன காணப்படுகின்றன? மேலும் இவைகளுடைய வலிமை எப்படிப்பட்டது? இவ்விரண்டு கேள்விகளுக்கும் ஒருவித ஸமாதானமும் சொல்ல முடியாமல், சென்ற நூறுவருஷகாலமாய் அறிஞர்கள் தவித்ததுண்டு.

* * * * * * *

வாடிப்போன செடிகளில் விஷத்தைக் குத்திவிட்டால், அவைகளுடைய சக்தியும் குறைந்து போய், ஜலத்தை உறிஞ்சவும் திடனற்றுக்கிடக்கின்றன. ஆயின், பல நாள் தண்ணீரில்லாமலே காய்ந்துகிடந்தாலும் ஒரு "டானிக்" மருந்து கொடுத்தவுடன், செடிகள் மிகுந்த பலத்தோடு ஜலத்தை இழுத்துக்கொள்ளும் காக்ஷியைக்காண்கின்றோம். இவ்விஷயங்களை நான் பிரத்தியக்ஷத்தில் ஆராய்ந்து பார்த்திருக்கிறேன். வாடிக்கிடக்கின்ற செடிகளும், 'டானிக்' உட்கொண்டவுடன், பிழைத்து எழுந்து திரும்பவும் ஆவலோடு தண்ணீர் பருகுவதைப்பார்க்கிலும் ஆச்சரியமொன்றும் இல்லை. இவைகளிலிருந்து, செடிகொடிகளின் திடத்தைப் பொருத்ததாகவே அவைகள் ஜலம் இழுத்துக்கொள்ளுவதும் காணப்படுமல்லவா?

* * * *

நம்மைப்போலவே, செடிகளுக்கும் ஜீவனென்பது ஒன்றுண்டு. நமது சரீரத்தில் சில பாகங்கள் தான் உயிர் நிலைக்கும் ஆதாரமாயிருக்கின்றன. (அவைகளுக்கு ஜீவாணுக்களென்றும், உயிரணுக்களென்றும் பெயர் வைப்போம்.) செடிகளுக்குள்ளும், ஜீவாணுக்களின் தன்மை எப்படிப்பட்டது? இதை விசாரிப்பது மிகவும் கஷ்டமாகத்தோன்றிற்று. முதலில் இதைக்கண்டுபிடிப்பது முடியாததென்றே நினைத்தேன். மரங்களுக்குள் நடக்கும் விஷயங்களை ஒருவன் எவ்வாறு அறியவும் முடியும்?

* * * *

இதற்காகவே, ஓர் எலெக்ட்ரிக் ஊசியைப் பிரயோகித்தேன். இதின் சம்பந்தமாய் எல்லா விஷயங்களையும் தெரிந்துகொள்ளவேண்டுமென்றால், லாங்மன்ஸ் கம்பெனியார் வெகு சமீபத்தில் வெளியிடப்போகும் எனது புஸ்தகத்தில் விபரங்கள் முழுமையும் காணலாம். இந்த எலெக்ட்ரிக் ஊசியை மரத்திற்குள் நன்றாய் செலுத்தவேண்டும். கடைசியில் ஜீவாணுக்களோடு இதுவும் பட்டவுடன், இந்த ஊசியே எலெக்ட்ரிக் சமிஞ்ஞைகள் காட்டுகின்றன

* * * *

இதைக்கொண்டு, செடிகளிலும் ஜீவாணுக்கள்தான் ஸத்தையும் மேலே செல்லச்செய்வது தெளிவாக விளங்குகின்றது. ஒருதரம் தாது அடித்தபின், மறுபடியும் அடிக்க 14 செகண்ட்கள் ஆகும். ஆயினும், மனிதர்களைப்போலவே, செடிகளிலும் தாதுவை நமதிஷ்டப்படியே நாம் மாற்றவும்கூடும்.

* * * *

ஹிருதயத்திலிருந்து இரத்தமானது நமது தேகம் முழுவதும் ஓடுவதால் புஷ்டியைத்தருவது போலவே, செடிகளிலும் தாதுவின் பெருமையால்தான் ஸத்தானது எங்கும் பரவுகின்றது. செடிகளுக்கும் பிராணிகளுக்கும் நாடியானது ஒரேவிதமாய்க் காணப்படுகின்றது. ஜ்வரத்தில் தாதுவும் வேகமாய் அடிப்பதுபோலவே, உஷ்ண மிகுதியால் செடி கொடிகளிலும் ஜீவாணுக்கள், நாடி வேகத்தால், ஸத்தையும் துரிதமாய்ச் செலுத்துகின்றன. பனிகாலங்களில் இலைகள் ஒடுங்கியிருப்பதற்குக் காரணங்களும் இப்போது தெளிவாய்ப் புலப்படும்.

* * * *

உயிருள்ளவை எல்லாவற்றிலும், சூக்ஷமங்கள் ஒரேவிதமாகத்தான் தோன்றுகின்றன. செடிகளும், பிராணிகளைப்போல, பயம், துக்கம், சந்தோஷம், இவைகளால் மாறுதலடைவதையும் நாம் பார்க்கிறோம். பிராணிகளுடைய இரத்த ஓட்டத்திற்கும், செடி கொடிகளுடைய ஸத்து ஓட்டத்திற்கும் ஒருவித பேதமுமில்லை. மருந்துகளால் விளையும் நன்மை தீமைகள், இவ்விரண்டுக்கும், பொதுவாயிருக்கின்றன. ஆதலால் செடிகளைப் பற்றிய நமது அறிவைக்கொண்டு மனுஷ்யர்களின் விஷயத்திலும், எல்லா தத்வங்களை நாம் ஊகிப்பது முடியும்.

[ஸர். ஜகதீச சந்திரபோஸ் இதைக் கண்டுபிடித்ததால், நன்மைகளென்ன? இதுவரையில், மருந்துகளின் குணகுணங்களை ஆராய்ந்து பார்ப்பவர்கள், முயல், எலி, நாய், பன்றி இவைகளுக்குள் குத்தி பரீக்ஷை செய்து வந்தார்கள். இப்படிப் பரீக்ஷை பண்ணுவதால் அவைகள் படும் அவஸ்தைகள் மகா கோரமாயிருக்கின்றன. இவ்வாறு ஜீவஜந்துக்களை வதைசெய்வது கூடாதென்று ஐரோப்பியர்களுள் பலர் கண்டித்ததுண்டு. இப்பொழுது டாக்டர் போஸ் கண்டுபிடித்த விஷயங்களிலிருந்து, செடி கொடிகளுக்கும் பிராணிகளுக்கும் எவ்விதத்திலும் வித்தியாசங்களில்லையென்பது நிச்சயமாய்த் தெரிந்துவிட்டதால், இனிமேல் "ஸைபண்டிஸ்ட்ஸ்"கள் ஜீவஹிம்ஸை செய்யாமல், செடிகளைக் கொண்டே மேன்மேலும் வைத்தியத்தில் அறிவைப் பெறக்கூடும். ஆகினும், செடி கொடிகளையும் நாம் வதைப்பது அதர்மமென்றும் சொல்லலாம். ஸர். ஜகதீச சந்திரபோஸ் உலகத்தில் எல்லாவற்றிற்கும் உயிர் இருக்கின்றதென்பதை நன்றாய்க் காண்பித்து விட்டார். சில வருஷங்களுக்கு முன் ஓர் உபன்னியாசத்தின் முடிவில், நமது இருஷிகளுடைய ஞானத்தில் ஓரணுவேனும் தனக்கில்லையென்றே அவர் சொல்லியிருப்பது அவரது குணத்தைக் காட்டுகின்றது.]

புயற் காற்று

[இராமேசனுக்கும் அந்த பாபுவின் குமாரியான ஹேமநளினிக்கும் உள்ள காதல் இராமேசனுக்குப் போட்டியாயிருந்த அக்ஷயன் பாடிய பாடல்களால் வெளியானதும் பிறகு அவன் காதலின் தூண்டுதலால் பாடக் கற்றுக்கொள்ள முயன்றதையும் வருணிப்பது]

அக்ஷயனின் குரல் அவ்வளவு சிலாக்கியமான தல்லவெனினும் அவன் "பிடில்" வாசித்துக்கொண்டு வாய்ப்பாட்டுப் பாடும்போது பாட்டில் குற்றங் கண்டுபிடிப்பதில் சூரர் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவர் தவிர மற்ற யாவரும் "பேஷ் பேஷ் இன்னொருதரம், இன்னொருதரம்" என்று சொல்லுவார்கள். அந்த பாபுவுக்கு பாட்டு என்றால் பிடியாது. ஆனால் அதை அவர் ஒத்துக்கொள்வதில்லை. பாடகப்பிரியர் இஷ்டப்படி பாட்டுகள் கேட்டது போதும், இனி நிறுத்திவிடலாம் என்று அவருக்குத் தோன்றும்போது பாட்டை நிறுத்துவதற்கு அவருக்கு சில வழிகள்தெரியும்.

யாராவது அக்ஷயனை "இன்னொருதரம் பாடு" என்று கேட்டுக்கொண்டால் உடனே அந்த பாபு "சீ! போதும், போதும்! விட்டுவிடுங்கள். பாடத்தெரிந்தவன் என்று ஒருவன் உங்கள் கையில் அகப்பட்டுக்கொண்டால் ஓயாமல் அவனைத்தொந்திரை செய்வதா? கொஞ்சமாவது பச்சாத்தாபம் வேண்டாமா?"

அதற்கு அக்ஷயன் தாராள மனதுடன் "பாதகமில்லை, அந்த பாபு! இதொரு பிரயாஸமா? ஒன்றுமில்லை. யார் யாரைத் தொந்தரை செய்கிறார்கள் என்றுமட்டும் எனக்குச்சந்தேகம்" என்பான்.

அப்போது முதலில் பேசியவன் "அந்த சந்தேகத்தை பின்பு நிவர்த்தித்துக்கொள்ளலாம், நீ மறுபடியும் பாடி ஆகட்டும், அப்புறம் அதை நிச்சயம் செய்வோம்."

ஒருநாள் சாயங்காலம் மேகங்கள் ஆகாயத்தைக் கவர்ந்துகொண்டு வந்ததால் எங்கும் இருண்டிருந்தது. இராத்திரியும் மழை நின்றபாடில்லை. மழையினால் அக்ஷயன்கூட வீட்டிற்குத் திரும்பப்போக முடியவில்லை. ஹேமநளினி அவனை பாடும்படி கேட்டுக்கொண்டு "ஆர்மோனிய"த்தை எடுத்து சுருதி பிடித்தாள்.

அக்ஷயனும் "பிடிலை" எடுத்து சுருதிசேர்த்து பின் வருமாறு ஹிந்துஸ்தானியில் ஆரம்பித்தான்.

"பாபு பஹீன் புர்ஸையினு
நீதா நாஹின் பின்ஸைசனு"

அந்தப் பாடலை கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு பதத்தின் பொருள் விளங்காவிட்டால் என்ன? மனோபாவங்கள் நிறைந்து காதல் கிளர்ச்சியுற்று உன்னித்தெழும் தருவாயில் ஜாடையாய் குறிக்கும் சிறு குறிகள்கூட போதுமல்லவா? இந்த பாட்டின் போக்கு இன்னது என்பது வியக்தமாய் தெரிந்தது—மழை பொழிவதும் மயில்கள் கூவுவதும் ஆசை நாயகியை நினைந்து காதலன் உருகுவதுமே அந்தப்பாடலின் தாத்பரியம் என்று.

தான் வாய்விட்டுப்பேச முடியாத தன் அந்தரங்க அபிப்பிராயங்களை பாட்டு மூலமாய் அறிவிக்க முயன்றான் அக்ஷயன்; ஆனால் அவன் பாடியது அங்கிருந்த மற்ற இருவர் மனோபாவங்களையும் விளங்கக் கூடியதாயிருந்தது. இரண்டு இருதயங்களும் ஒத்திருக்கவே அவை அலைபுரண்டோடும் பாட்டுப்பெருக்கில் அழுந்தி ஐக்கியமாயின. அப்போது அவர்கள் கண்களுக்கு உலகம் தினை கலந்து சாதாரணமானதாகத் தோன்றவில்லை எங்கும் ஆனந்த ஒளி பரந்து உலகமுழுமையும் விகசித்து விளங்கிற்று.

உலகத்தில் மனிதரின் இருதயங்களில் எழும்பிய ஆசை வகைகளையெல்லாம் திரட்டிச்சேர்த்து அவர்கள் இருவர் இருதயத்திலும் பொழிந்தது போலிருந்தது அவர்களுக்கு; அவ்வளவு ஆசையும் பற்றும் ஆனந்தமும் அவர்களுக்கு அப்போது உண்டாயிருந்தது.

மழையும் ஓய்ந்தபாடில்லை; பாட்டிற்கும் முடிவில்லை. "நிறுத்தாதேயும் அக்ஷய பாபு, இன்னொரு பாட்டுப் பாடும்" என்று ஹேமநளினி சொன்னதுதான் தாமதம்; உடனே அக்ஷயன் சற்றும் தயங்காமல் வேறொரு பாட்டு ஆரம்பித்துவிட்டான். இந்தப்பாட்டோ இருண்டு திரண்ட மேக ஜாலங்கள் போன்றும் அவையிடையே மின்னல்கொடிகள் ஊடுருவுவது போன்றும் இருந்தது. மனித இருதயத்தில் ஆசையுடன் எழும் எண்ணங்கள் இந்தப்பாட்டிலும் பதுங்கியிருந்தன.

நிரம்ப நேரமாயிற்று அன்று அக்ஷயன் மழை நின்று வீட்டிற்குப் புறப்படும்போது; இராமேசனும் புறப்படவே, அவன் பாட்டில் மயங்கிய பார்வையுடன் ஹேமநளினியின் முகத்தை ஒரு விநாடி பார்த்தான். பாட்டின் மயக்கம் அவளுக்கும் இருந்தது. மழை சற்று நேரம்தான் நின்றிருந்தது.

இராமேசன் வீட்டிற்குச்சென்றவுடன் மறுபடி மழை கொட்ட ஆரம்பித்தது அன்றிரவு இராமேசனுக்கு தூக்கம் வரவில்லை. ஹேமநளினிக்கும் தூக்கம் வாராததால் இருட்டில் ஓயாது விழும் மழைத் தாரைகளின் சப்தத்தைக் கேட்டுக்கொண்டே யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

பாபு பஹீன் புர்ஸையினு
நீதா நாஹின் பின்ஸைசனு

என்ற பல்லவி அவளுடைய மனதையும் ஊடுருவி நின்றது.

மறுநாட்காலையில் இராமேசன் தனக்குள்ளே பின்வருமாறு சொல்லிக்கொண்டான்.

"ஆகா! எனக்குமட்டும் பாடத்தெரிந்திருந்தால்; பாடத்தெரிவதற்காக நான் வேறு எந்த வித்தையை வேண்டுமானால் கை விடத்தயார்" என்று; ஆனால் என்ன விடாமுயற்சியுடன் பழகினாலும் வாய்ப்பாட்டில் தேர்ச்சியடைவது முடியாத காரியம் என்பது அவனுக்கு நன்றாய் தெரியும். ஆனாலும் ஏதாவது ஒரு வாத்தியம் வாசிக்கவாவது கற்றுக்கொள்ளலாம் அல்லவா? தான் ஒருக்கால் அந்த பாபுவின் வீட்டிலே தனியே இருந்தபோது "பிடில்" தந்திகளிலே வில்லைப்போட்டு இழுத்ததுஅப்போது அவன் ஞாபகத்திற்கு வந்தது. அந்த ஒரு இழுப்பே போதுமே, தனக்கு பாட்டு வராதுஎன்று அறிந்து கொள்வதற்கு. அப்போது பிடில்பக்கம் வராதே என்று சரஸ்வதி தேவி கடிந்துகோபித்ததுபோல் இருந்தது. ஆகையால் 'பிடில்' வாசிக்க முயலுவது தனக்கு கொடுந்தண்டனை விதித்தது போலாகும் என்று தன் ஆசையை ஒருவாறு மட்டுப்படுத்திக்கொண்டு "ஆர்மோனியம்" போதும்என்று ஒரு "ஆர்மோனியம்" வாங்கினான். அதை உடன் தன்னறைக்கு எடுத்துச் சென்று கதவை மூடிவிட்டு கீழே உட்கார்ந்து மெதுவாய் கைவைத்துப்பாட ஆரம்பித்தான். ஆர்மோனியம் பிடிலைப்போல் அவ்வளவு கடினமான வாத்தியம் அல்ல என்று கண்டுபிடிக்க வெகு நேரமாகவில்லை.

பிறகு அவன் அந்த பாபுவின் வீட்டிற்குப் போனபோது ஹேமநளினி அவனைக் கண்டவுடன் "உன்னறையில் நேற்று யாரோ ஆர்மோனியம் வாசிக்கும் சப்தம் கேட்டோமே" என்றாள். கதவை மூடிவிட்டு வாசித்தால் பிறருக்குத் தெரிந்திராது என்றல்லவா நினைத்திருந்தான் இராமேசன்; ஆனால் மூடிய கதவின் வழியே அவன் அறையிலிருந்து வரும் சப்தங்களைக் கூட யாரோ கவனித்துக் கேட்கிறார்கள் என்று புலப்பட்டது. இராமேசன் வாஸ்தவத்தை ஒப்புக்கொள்ளவேண்டியிருந்தது.

"இப்படி உள்ளே அடைத்துக்கொண்டு தனியே கற்றுக்கொள்ள வேண்டுமென்று வீணே யத்தனிப்பதில் பயனில்லை. இங்கே வந்து ஆர்மோனியத்தில் பழகலாமே. எனக்கும் கொஞ்சம் தெரியும் தெரிந்தமட்டும் என்னால் உனக்குச் சொல்லிக் கொடுக்க முடியும்"

"எனக்குச் சொல்லிக் கொடுப்பதென்றால் அதிக சிரமமாயிருக்கும். நான் வாசிப்பதெல்லாம் கோணலாகவே இருக்கிறது.

என்ன கோணலாய் வாசித்தாலும் எனக்குத் தெரிந்ததை யெல்லாம் எப்படியாவது உனக்குச் சொல்லிக் கொடுக்க முடியும்," என்றாள் ஹேமநளினி.

"தனக்கு நன்றாய் வாசிக்கவரவில்லை, எல்லாம் கோணலாய் வருகின்றது" என்று இராமேசன் சொன்னது வெறும் மரியாதை வார்த்தையல்ல, முற்றும் உண்மைதான் என்பது விளங்கிற்று. இப்பேர்ப்பட்ட உபாத்தியாயினி கிடைத்துமே பாட்டில் ஸ்வரூபத்தை அவனுடைய மூளையில் புகுத்துவது மிகக்கடினமாயிற்று. நீந்தத்தெரியாத ஒருவன் குட்டையில் விழுந்து காலையும் கையும் படபடவென்று அடித்துக்கொள்வதைப் பார்த்திருப்பீர்களே. இராமேசன் பாடமுயன்று தத்தளித்தது அதை ஒருவாறு ஒத்திருக்கும். ஆனால் இராமேசன் விஷயத்தில் மட்டும் ஜலம் முழங்கால் ஆழந்தான் இருந்தது. அவனுக்கு ஆர்மோனியத்தில் எந்த விரலை எங்கே வைக்கவேண்டுமென்றே பிடிபடவில்லை. ஒவ்வொரு கட்டையை அழுத்தும்போதும் அபஸ்வரமே மேலிட்டெழுந்தது. ஆனால் அவனுக்கு பாட்டுக்கும் அபஸ்வரத்திற்கும் வித்தியாசம் தெரியவில்லை. ஒன்றையுமே கவனிக்காமல் எல்லா விதிகளையும் மறந்து கையைமட்டும் மேலுங்கீழுமாய் வைத்து சப்தப்படுத்தினான். ஹேமநளினி "நீ வாசிப்பதெல்லாம் பிசகாயிருக்கிறதே". என்று சொன்னவுடன் தான்செய்த பிழையைமாற்றப் போனால் வேறு பிழைகள் ஏற்படும். ஆனால் கையெடுத்த கருமத்தை விட்டுவிடாமல் மனம் செலுத்தி விடாமுயற்சியுடன் செய்து முடிப்பவன் அல்லவா இராமேசன்? ரஸ்தாவில் மெதுவாய் ஊர்ந்து எது உடைந்து பொடியாகின்றது என்ற விசாரமில்லாமல் போகும் நீராவி உருளை (Steam-Roller) யைப்போல் இராமேசன் கவனியாமல் நிர்விசாரமாய் ஆர்மோனியத்தின் கட்டைகளைத் தகர்த்து விட்டான்.

அவன் செய்யும் பிழைகளைக் காண ஹேமநளினிக்கு சில வேளைகளில் சிரிப்புவரும்; தானும் தன் பிழைகளைக்கண்டு சிரித்துக் கொள்வான். எப்பொதும் தப்பாகவே செய்யும் இவனுடைய சாமர்த்தியத்தைக் காண்பது ஹேமநளினிக்கு வேடிக்கையாயிருந்தது. பிழைகளினின்றும் கூட சுகத்தை அநுபவிக்கும் சக்தி காதலுக்கு உண்டு. குழந்தை முதல் முதல் கால் எடுத்து வைத்து தள்ளாடுவது அதற்கு நடக்கச் சொல்லிக் கொடுக்கும் தாயாருக்கு எவ்வளவு களிப்பைத்தருகின்றது. அது போலவே இப்படி பாட்டின் ஸ்வரூபமே விளங்காது இராமேசன் தள்ளாடியது ஹேமநளினிக்கு உள்ளுக்குள் அதிக சந்தோஷத்தை உண்டாக்கிற்று.

"நான் பாடும் போது நீ இப்படி சிரிப்பதெல்லாம் இருக்கட்டும்; நீ பாட ஆரம்பிக்கும் போது மட்டும் பிழைகள் செய்ததில்லையோ," என்றான் இரண்டொரு தரம் ஹேமநளினியிடம்.

அதற்கு அவள் "ஆமாம்! இராமேசபாபு ஆனால் வாஸ்தவத்தில் நீ செய்யும் பிழைகளோடு அவைகளை ஒப்பிடக்கூடுமோ?"

இராமேசன் பின்வாங்குபவனோ? சற்று சிரித்து விட்டு மறுபடியும் அடியிலிருந்து ஆரம்பிப்பான். அந்தபாபுவுக்கு பாட்டு விஷயம் ஒன்றும் தெரியாது என்று அறிவோமே; அவர் சிலவேளை ஏதோ உற்றுக்கேட்பவர்போல கேட்டுபின்பு "நீங்கள் என்ன வேண்டுமோ சொல்லுங்கள்; இராமேசன் சீக்கிரமே வித்துவான் ஆகிவிடுவான் பார்" என்பார் ஹேமநளினி அப்போது "வித்வான் தான், அபஸ்வாத்தில்" என்பாள்.

அந்தபாபு. "இல்லை இல்லை நான் முதலில் கேட்டதைவிட எவ்வளவு தேர்ச்சியடைந்திருக்கின்றான். இன்னும் சற்று வாசித்து வந்தால் வித்துவான் ஆவான் என்பதில் சந்தேகமில்லை. ஒன்று மட்டும்தான் வேண்டும். ஓயாமல் சாதனம் செய்து ஸ்வரம் இன்னது என்று தெரிந்து கொண்டால் பின்னால் பாட்டுதானே வந்து விடும்" என்பார்.

இந்தத் தீர்மானத்தை யார் மறுப்பவர்? வீட்டுகிகு யஜமானரான பெரியவர் இப்படி தீர்மானித்தால் குடும்பத்திலுள்ள மற்றவர் மரியாதையுடன் வாய் திறவாமல் அங்கீகரிக்க வேண்டியதல்லவா?

ஸ்ரீ காளிதாஸர்

"ஸ்ரீ காளிதாஸர்" என்ற பெயர் புனைந்த மாதப்பத்திரிகையின் முதல் ஐந்து பாகங்கள் நமக்குக் கிடைத்தன. ஸ்ரீகாளிதாஸர் ஸம்ஸ்கிருத பாஷையில் இயற்றியுள்ள கிரந்தங்களை மொழிபெயர்த்து ஆங்காங்குள்ள பொருளழகு முதலியவற்றை எடுத்துக்காட்டும் குறிப்புகளுடன் தமிழில் அச்சிட உத்தேசித்து பண்டிதர். வே. ஸ. கிருஷ்ணமாசாரியார் அவர்கள் ஸ்ரீ கோமளவல்லி புஸ்தகசாலை காரியதரிசிகள் மூலமாய் வெளியிடுகிறார்கள். மாதம் ஒன்றுக்கு 40 பக்கங்களாய் வெளிவருகின்றன. வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ 3-0-0 தான். இதுவரை "மாளவிகாக்கினி மித்ரீயம்" என்ற நாடகத்தில் 4 அங்கமும் ஐந்தாம் அங்கத்தில் ஒரு பகுதியும், "குமாரசம்பவம்" என்ற காவியத்தில் மூன்று ஸர்க்கங்களும் வெளிவந்திருக்கின்றன. நாம் பார்வையிட்ட வரையில் மொழிபெயர்ப்பு சரியாகவே காணப்படுகிறது. குறிப்புகள் பொருளையும் பண்டிதரின் ஆராய்ச்சி, பாஷா ஞானம் முதலியவற்றையும் விளக்குகின்றன. காளிதாஸர் எழுதியவற்றை ஸம்ஸ்கிருதத்திலே வாசித்து அநுபவிக்க முடியாத தமிழ் மக்கள் யாவரும் இதை வாங்கிப்படித்து அந்த கவிசிரேஷ்டரின்பெருமையை ஒருவாறு உணருவார் என்று நம்புகின்றோம்.

"புஸ்தகப் பிரியன்"

சிறு கதைகள்.

தென்னிந்தியா சமூக வாழ்க்கையை அனுசரித்து எழுதப்பட்டுள்ள ஆறு நாவல்கள் கொண்டது. தற்காலம் நவீன நாகரீகத்தால் சமூக வாழ்க்கை எவ்விதம் மாறுபாடு அடைந்துவருகிறதென்பதும், வாழ்க்கை லக்ஷியங்களின் முரண்பாடுகளும் அவைகள் எவ்விதம் தீருகின்றன வென்பதும் நன்கு தெரியவரும். விலை அணா 8

ஸ்வப்ன பல அகராதி.

1000ஸ்வப்னங்களும் அவைகளின் பலன்களும்.

விலை அணா 8.

மகாத்மா காந்தி.

ஹோம்ஸ்பாதிரியாரின் பிரசங்கங்கள் விலை அணா 5.

வி. நாராயணன் & கம்பெனி,

4. கொண்டி செட்டித் தெரு, மதராஸ்.

மஹாத்மா காந்தியின் சிறைச்சாலை யனுபவங்கள்

தென்னாபிரிக்காவிலே நம்மவருக்காகப் போராடி சிறைச்சாலையை தேசாபிமானத் தவச்சாலையாகக் கொண்டு அருப்பாடுபட்டும் உள்ளஞ்சலியாது ஸாத்விக எதிர்ப்பையே சாதனமாகக் கொண்டு, தேசாபிமான தத்வங்களை மகாத்மா விளக்கிக் கூறியிருக்கும் அரிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. எளிய இனிய நடையில், அவராலே கூறப்பட்டவாறு எழுதப் பெற்றது.

விலை ரூபா 0—8—0

மஹாத்மா காந்தியின் இந்திய சுயராஜ்யம்

ஸ்வராஜ்யம் என்பதை நன்கு விளக்கி அதில் மகாத்மா காந்தி எழுதிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தது போல், நம் தேசத்தில் "நாகரிகம் நாகரிகம்" என்று தோன்றிப் பற்பலரையும் மயக்கி வருத்தும் சிலவிஷய விவரங்கள் நிர்மல சிந்தையுடன் விளக்கப்பட்டுள்ளன. படிப்போருக்கு மனமயக்கம் நீங்கித், தெளிவு உண்டாகி, தேசாபிமான உதயம் ஏற்படும்.

இதன் விலை 0—8—0

மஹாத்மா காந்தியின் சரித்திரம்

உலகிலே ஒப்புயர்வற்ற மகா புருஷனெனவும், ஸ்ரீ பாரத பூஷண மெனவும் பெரியோர்களால் கொண்டாடப்படும் இப்பெருமானது சரித்திரத்தையும் அரும் பெருங் குணங்களையும் உயர்ந்த சீலத்தையும் ஒப்புயர்வற்ற தன்னலப் பரித்தியாகத்தையும் அறிய விரும்பும் தமிழ் மக்கள் அனைவருக்கும் இந்நூல் சிறந்த கருவியாகும். குழந்தைப் பருவ முதல் இன்றளவும் மகாத்மாவின் வாழ்வில் நேர்ந்துள்ள சம்பவங்கள் எல்லாம் அழகான தமிழ் நடையில் பாலரும் படித்தறியும் வண்ணம் விரிவாக எழுதப்பட்டுள்ளன. விலை அணா 0—8—0

கணேஷ் கம்பெனி,

39, தம்புசெட்டி தெரு, சென்னை.

புத்தக விளம்பரங்கள்.

சுதேசமித்திரன் புத்தகசாலை.

உதயலன்.

என்கிற கொற்கைச் சிங்களவன்.

ஷேக்ஸ்பீயர் மகாகவி ஆங்கிலபாஷையில் எழுதியுள்ள "ஒதெல்லோ என்கிற வெனிஸ் மோரியன்" என்னும் ஓர் அருமையானநாடகம். அ. மாதவையா அவர்கள் மொழி பெயர்த்தமைத்தது. விலை அணா 12.

பத்மாவதி சரித்திரம்.

ஸ்ரீமான் அ. மாதவய்யா, பி.ஏ., எழுதிய அருமையான நாவல். புதிய பதிப்பு 10. படங்களுடன் கூடியது. இந்நூல் அலங்காரமாய் அநேக பழமொழிகளை அணிந்து சில மதுரமான கவிகளை உள்ளடக்கி, சிறுவர் சிறுமிகளும் எளிதிற் படித்தறியும்படியான தமிழ் நடையில் உள்ளது. விலை ரூ. 2.

வர்த்தகயுக்தி.

வியாபார சம்பந்தமான விஷயங்கள் கொண்டது. ஒவ்வொரு தொழிலாளியும் அவசியம் படிக்க வேண்டிய நூல். இதனை மெச்சிப் புகழாத பத்திரிகைகள் கிடையா. முதற் பதிப்பு விளம்பரமின்றி விற்பனை. இரண்டாம் பதிப்பு பத்திரிகையில் விளம்பரம் செய்த ஒரு வாரத்துக்குள் விற்பனை. இது நான்காம் பதிப்பு. விலை அணா 6.

சுதாமாலிகா.

இது ஒரு கதைக் களஞ்சியம்.

ஸி. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய விநோதக் கதைகளும், விசித்திரங்களும், பொதிந்து கிடக்கின்றன. கதா விநோதம், 33-விஷயங்கள் அடங்கியிருக்கின்றன, விலை ரூபா 1.

பாமாலை.

இராமலிங்க ஸ்வாமிகள், மாணிக்க வாசகர் முதலியோர் திருவாய்மலர்ந்த சில அற்புத பாடல்களை, ஒரு பெரியார் தொகுத்தபடி அச்சிடப்பட்டிருக்கிறது. கோயம்பத்தூர், திருநெல்வேலி ஜில்லாக்களில் பிரதிவாரந்தோறும் படிக்கும் பக்த சிரோன்மணிகளுக்கு இந்நூல் மிகவும் உபயோகமானது. விலை அணா 4.

சிறைவாசஞ் செய்யும்.

கிருஷ்ணஸ்வாமி சர்மா

அவர்களால் எழுதப்பட்டது.

	ரூ.	அ.
மகாத்மாகாந்தியின் குரு, டால்ஸ்டாய்	0	4
பண்டித மோதிலால் நேரு	0	2
மகாத்மா காந்தி	1	8
சித்தரஞ்சன தாஸ்	0	12
முஹம்மத் அலி, ஷவுகத் அலி	1	0
ஸ்வராஜ்யம்	0	8
லாலா லஜபதிராய்	0	8
சிவாஜி	1	0

திக்கற்ற இருகுழந்தைகள்.

இந்த நாவல் பெரியதாயும் வாசிக்கும் போது மடிக்கிளர்ச்சி யுண்டாக்ககூடியதாயுமுள்ளது. னபக்கச்சுவை மிகுந்து மகளிர் வாழ்க்கையிற் படிப்போர் யாவருக்கும் அனுதாபமும் ஒற்றுமையுணர்ச்சியும் விளையும்படி செய்கின்றது. இது யாவருக்கும் விளங்கும் எளிய நடையை உடையது. படிக்கப் படிக்க மேன்மேல் மனதைக் கவரும் இனிய கதைப்போக்கையும் நன்கறிந்து கொள்ளலாம். விலை ரூ. 1-8.

மானேஜர், சுதேசமித்திரன்,

சென்னை.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினால், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகல தினுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேடலாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனாம்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.

Telegrams: "Adimoorthi" Benares.

சுதேசியமானது! உபயோகமுள்ளது!!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

தமிழ் உலகு

ADVERTISEMENT RATES
(PER INSERTION)

Per 1 Page	Rs.	12
Per ½ Page	Rs.	7
Per ¼ Page	Rs.	4

Apply to

The Manager,
'THE TAMIL WORLD'
MYLAPORE.

தமிழ் உலகு

சந்தா விகிதங்கள்

(தபால் கூலி உள்பட)

வருஷம் 1-க்கு ரூபா 5.
வருஷம் ½-க்கு ரூபா 3.

மானேஜர்,
'தமிழ் உலகு'
மைலாப்பூர்.

தமிழர் நேசன்.

சாஸ்திர அறிவைப் பரவச் செய்யும் மாதாந்தப் பத்திரிகை.

இது தமிழர் கல்விச் சங்கத்தால் வெளியிடப்படுவது

பட்டமும் பரிசும் பெற்ற பல மேதாவிகளால் எழுதப்பட்டது. பெண்டிரும் சிறுவர் சிறுமிகளும் படித்தறிதற் பொருட்டு மிகவும் எளிய நடையில் உள்ளது. சாஸ்திர விஷயங்களைத்தவிரப் பல கதைகளையும் குறிப்புகளையும் உடையது.

அநேகச் சித்திரப்படங்களோடு கூடியது.

கல்வி இலாகா டைரெக்டராலும், ஜில்லாபோர்டு தாலூகாபோர்டு தலைவர்களாலும், பள்ளிப் போதகர்கள் பலராலும் ஆதரிக்கப்பட்டது. உள் நாட்டு, வெளி நாட்டுப் பத்திரிகைகளால் புகழப்பட்டது.

வருஷச் சந்தா மூன்று ரூபாய்.

கௌரவக் காரியதரிசி,
தமிழர் கல்விச் சங்கம், மைலாப்பூர்.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் D. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' காரியாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.